உடனடி வெளியீட்டுக்காக
ஊடகத் தொடர்பு: அன்னா ஷில்லர், (+1) 202-419-4514, aschiller@pewresearch.org

**குடும்பங்களிலும், சமூகத்திலும் பாலினப் பங்கு குறித்து இந்தியர்கள் எப்படி பார்க்கிறார்கள்**

*இந்தியர்கள் பெண்களை அரசியல் தலைவர்களாக ஏற்கிறார்கள், ஆனால், குடும்ப வாழ்க்கையில் காலங்காலமாக ஆணுக்கும், பெண்ணுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் பொறுப்புகள் தொடர்வதையே பலர் ஆதரிக்கிறார்கள்*

**வாஷிங்டன், டி.சி. (மார்ச் 2, 2022)** - அரை நூற்றாண்டு காலத்துக்கும் முன், உலகில் பெண் பிரதமரைத் தேர்வுசெய்த முதல் சில நாடுகளில் ஒன்றாக இந்தியா இருந்தது, அத்துடன் தற்போது இந்தியாவில் மிகுந்த செல்வாக்கு செலுத்தும் இந்தியாவின் பெரிய தேசியக்கட்சி ஒன்றின் தலைவராக உள்ள சோனியா காந்தி உள்ளிட்ட பல பெண் அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். இன்று "பொதுவாக, பெண்கள் மற்றும் ஆண்கள் சமஅளவில் அரசியல் தலைவர்கள் ஆகிறார்கள்" என்று பெரும்பாலான இந்தியர்கள் கூறுகிறார்கள் மேலும், பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் ஆண்களைவிட பொதுவாக பெண்கள் சிறந்த அரசியல் தலைவர்கள் ஆகிறார்கள் என்று கருதுவதாக இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 30,000 வயதுவந்தோரிடம் நடத்தப்பட்ட சமீபத்திய, ப்யூ ரிசெர்ச் சென்டர் கருத்தாய்வு தெரிவிக்கிறது. பெண்களைவிட பொதுவாக ஆண்கள் சிறந்த அரசியல் தலைவர்கள் ஆகிறார்கள் என்கிற கருத்தை வயது வந்தோரில் கால்பங்கு மக்கள் மட்டுமே கொண்டிருக்கின்றனர்.

இருப்பினும், குடும்பச் சூழல்களில், ஆண்களுக்குப் பெண்களைவிடப் பிரதானமான பங்கு இருக்க வேண்டும் என்று இந்தியர்கள் பொதுவாக சொல்கிறார்கள். பத்தில் சுமார் ஒன்பது இந்தியர்கள், மனைவி எப்போதும் அவருடைய கணவனுக்கு கீழ்பணிய வேண்டும் என்ற கருத்துடன் ஒத்துப்போகிறார்கள். இக்கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று ஏற்பவர்களின் எண்ணிக்கை மூன்றில் இரண்டு பங்காகும். 2019-இன் பிற்பகுதியிலிருந்து 2020ன் முற்பகுதியில் (கோவிட்-19 தொற்று நோய்க்கு முன்பு வரை) நடத்தப்பட்ட கருத்தாய்வின்படி, மனைவி எப்பொழுதும் கணவருக்குக் கீழ்படிய வேண்டும் என்பது முற்றிலும்ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று இந்தியப் பெண்கள் சொல்லும் வாய்ப்பு ஆண்களைவிடச் சற்றே குறைவாக உள்ளது (61% அதற்கெதிராய் 67%).

இருப்பினும், பல இந்தியர்கள் இல்லத்தில் பாலினப் பங்கு குறித்த சமத்துவமான கருத்துகளை வெளிப்படுத்துகிறார்கள். உதாரணத்துக்கு, 62% வயது வந்தவர்கள் குழந்தைகளை ஆண், பெண் இருவரும் பொறுப்புடன் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். ஆனால் பெரும்பாலான மக்களிடம் பாரம்பரியமான பாலின விதிகளே ஆதிக்கம் செலுத்துகின்றன: வயது வந்தவர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் (34%) குழந்தைப் பராமரிப்பைப் பெண்களை கையாள வேண்டும் என்று கருதுகிறார்கள்.

அதைப்போலவே, குடும்பத்திலுள்ள ஆண் மற்றும் பெண் இருவருக்குமே சம்பாதிக்கும் பொறுப்பு இருப்பதாக சற்றே பெரும்பான்மையானவர்கள் (54%) கூறுகிறார்கள், ஆனால் பல இந்தியர்கள் (43%) இது முக்கியமாக ஆண்களின் கடமை என்று நினைக்கிறார்கள். வேலை வாய்ப்பு குறைவாக இருக்கும் போது, பெண்களைவிட ஆண்களுக்கே வேலைக்கான உரிமை அதிகம் இருப்பதாக வயது வந்த இந்தியர்கள் பெருமளவில் கூறுகிறார்கள், இது பொருளாதாரச் சூழலில் ஆண்களுக்கே அதிக முக்கியத்துவம் தொடர்வதைப் பிரதிபலிக்கிறது. இதை முழுமையாக ஏற்கும் பெரும்பான்மையானவர்கள் (56%) உட்பட, பத்தில் எட்டு பேர் இந்தக் கருத்துடன் ஒத்துப்போகிறார்கள்.

இல்லத்துக்குள், மகன் மற்றும் மகள் இருவருமே வேண்டும் என்று விரும்புகிறார்கள் கிட்டத்தட்ட எல்லா இந்தியர்களும் (94%) ஒரு குடும்பத்தில் குறைந்தது ஒரு மகனாவது இருப்பது மிகவும் முக்கியம் என்றும், தனியாக, குறைந்தது ஒரு மகளாவது வேண்டும் என்று (90%) இந்தியர்களும் கூறுகிறார்கள். பெரும்பாலான இந்தியர்கள் மகன் மற்றும் மகள் ஆகிய இருவருக்கும் பெற்றோர்களின் பரம்பரைச் சொத்தில் சம உரிமை கொண்டிருக்க வேண்டும் என்றும் (64%), பெற்றோர்களுக்கு வயதாகும் போது அவர்களைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு இருவருக்கும் உரியது என்றும் (58%) கூறுகிறார்கள். ஆனால், மகனா, மகளா, பரம்பரைச் சொத்தில் யாருக்கும் உரிமை என்று வரும் போது, இந்தப் பகுதிகளில் பெண்களைவிட ஆண்களே அதிக உரிமையும், பொறுப்பும் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்வதற்கான வாய்ப்பே அதிகம். உதாரணத்துக்கு, வயதான பெற்றோர்களைக் கவனித்துக்கொள்ளும் முதன்மையான பொறுப்பு மகன்களுக்கு இருக்க வேண்டும் என்று பத்தில் நான்கு வயது வந்தவர்கள் கூறும் அதே சமயம் 2% மக்கள் மட்டுமே பெண்களைப் பற்றி இதே கருத்தைக் கூறுகிறார்கள் இதுமட்டுமல்லாமல், பெரும்பாலான இந்தியர்கள் (63%) பெற்றோர்களின் ஈமச் சடங்குகள் மற்றும் அடக்கக் காரியங்களை புரிவதற்கு மகன்களுக்கே உரிமை உண்டு (63%) - மகள்களுக்கு அல்ல - என்று கூறுகிறார்கள்.

பல்வேறு வரலாற்று, சமூக, மதரீதியான மற்றும் பொருளாதாரக் காரணங்களால் இந்தியக் குடும்பங்கள் மகள்களைவிட மகன்களுக்கே அதிக மதிப்பளிக்க முனைகிறார்கள் - இந்த வழக்கம் "மகனை விரும்புவது" என்று குறிக்கப்படுகிறது. மகனை விரும்புவதும், சமீப காலங்களாக அல்ட்ரா சவுண்டு பரிசோதனையை சுலபமாக செய்த முடிவது ஆகியவை இந்தியா முழுவதும் பெண் கருவைத் தேர்ந்தெடுத்து அழிக்க வழிவகுத்துள்ளது, இந்த வழக்கம் சட்ட விரோதமானது என்றபோதிலும், குறைந்தபட்சம் சில சூழ்நிலைகளிலாவது, பாலினத்தை தேர்ந்தெடுத்து சிசுவை அழிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே பல இந்தியர்கள் நினைக்கிறார்கள்: பாலினத்தைத் தேர்ந்தெடுத்து கருக்கலைப்பு செய்வதை குறிக்கும் ஒரு வழக்குச் சொல்லான "குடும்பத்திலுள்ள சிறுமிகளும், சிறுவர்களும் சமமாக இருக்க வேண்டும் என்பதற்காக நவீன முறைகளைப் பயன்படுத்தி சோதனை செய்துகொள்வது" என்பதை "முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது " அல்லது "ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கது " என்று பத்தில் நான்கு இந்தியர்கள் கூறுகிறார்கள். நவீன முறைகள் மூலம் ஒரு குடும்பத்திலுள்ள சிறுமிகள் மற்றும் சிறுவர்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்துவது முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல "ஒரளவுக்கு" ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று பத்தில் ஒருவர் கூறுகிறார்.

இந்தக் கேள்விக்கும், இந்த அறிக்கையிலுள்ள பிற எல்லாக் கேள்விகளுக்கும், ஆண்கள் மற்றும் பெண்களின் கருத்துகள் மற்றும் எல்லா வயதுப் பிரிவினருக்கு இடையிலுமான வித்தியாசம் பெரிதாக இல்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால், மகளுக்குப் பதிலாக மகனையே விரும்புவது உள்ளிட்டவற்றில் ஆண்களைப் போல் அல்லாமல் சமத்துவமிக்க கருத்துகளை பெண்கள் தெரிவிப்பதற்கான வாய்ப்புகள் அரிது. இதைப்போன்றே மேற்சொன்ன விஷயத்தில் வயதானவர்களைப் போலவே இளைஞர்களின் (வயது 18 முதல் 34 வரை) கருத்தும் இருக்கிறது.

நாடு முழுவதும் 29,999 இந்திய வயது வந்தோரிடம் நேருக்கு நேர நடத்தப்பட்ட ப்யூ ரிசெர்ச் சென்டர் கருத்தாய்வின் அடிப்படையில் அமைந்த இரண்டாவது அறிக்கை இதுவாகும். இந்தக் கருத்தாய்வின் பல கண்டுபிடிப்புகள் "இந்தியாவில் மதம்: சகிப்புத்தன்மையும் தனிப்படுத்துதலும்," முன்னதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது, மத மற்றும் தேசிய அடையாளம், மத நம்பிக்கைகள், வழக்கங்கள் மற்றும் மத சமூகத்தினருக்கு இடையிலான மனோபாவங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தது. இந்தக் கருத்தாய்வானது இந்தியச் சமூகத்தில் பாலினப் பங்குகள் குறித்த பல கேள்விகளையும் உள்ளடக்கியிருந்தது, ஆனால் இந்தக் கேள்விகள் முந்தைய அறிக்கையில் ஆராயப்படவில்லை, முதல் முறையாக இப்பொழுது பிரசுரிக்கப்படுகிறது.

("இந்தியாவின் மத அமைப்பு," என்ற மற்றொரு சமீபத்திய அறிக்கை இந்தியாவின் மதக் கட்டமைப்பு சுதந்திரத்துக்குப் பிறகு எவ்வாறு மாறியுள்ளது என்பதை ஆராய்ந்தது.)

உள்ளூர் பேட்டியாளர்கள் நவம்பர் 17, 2019 முதல் மார்ச் 23, 2020 வரை, 17 மொழிகளை கருத்தாய்வை மேற்கொண்டனர். இந்தக் கருத்தாய்வு இந்தியாவில் 2020 இளவேனிற்காலம் முதல் கோவில்-19 வெகுவேகமாகப் பரவி, களப்பணிகள் தடைபட்ட மணிப்பூர், சிக்கிம் நீங்கலாக அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மற்றும் 1% இந்திய மக்கள் தொகையில் கால்பாக மக்களுக்கு வாழிடமாக உள்ள அந்தமான் மற்றும் நிகோபார், லட்சத்தீவுகளில் உள்ள தொலைதூர பிராந்தியங்களில் நடத்தப்பட்டது. காஷ்மீர் பிராந்தியத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காகக் களப்பணிகள் நடைபெறவில்லை என்றாலும், ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசங்களும் இந்தக் கருத்தாய்வில் சேர்க்கப்பட்டன.

தி ப்யூ சாரிட்டபிள் ட்ரஸ்ட்ஸ் மற்றும் ஜான் டெம்பிள்டன் பவுண்டேஷன் ஆகியவற்றின் நிதியளிப்பு பெற்ற இந்த ஆய்வானது, உலகம் முழுவதும் சமய மாற்றங்கள் மற்றும் சமூகங்களின் மீது அதன் தாக்கம் பற்றிய புரிதலுக்காக ப்யூ ரிசெர்ச் சென்டர் மேற்கொண்டு வரும் ஒரு பெரிய முயற்சியின் ஓர் அங்கமாகும்.

இந்த முழு அறிக்கை பாலினப் பாகுபாடு பாலினம் குறித்த இந்திய மனோபாவம் உலகளவில் எவ்வாறு ஒப்பிடப்படுகிறது; பாலினம் குறித்த மனோபாவங்களில் கல்வி மற்றும் மதத்தின் வலிமையான செல்வாக்கு; இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள், மற்றும் வெவ்வேறு வயதுடைய வயது வந்தவர்களிடம் பாலின மனோபாவத்தில் குறைந்தபட்ச வேறுபாடுகள்; மற்றும் பாலினப் பங்குகள் எவ்வாறு கருதப்படுகின்றன என்பதில் பிராந்திய அளவு, மாநில அளவு மாறுபாடுகள் குறித்த கருத்துகளைக் கொண்டுள்ளது.

முழு அறிக்கையை ஆங்கிலத்தில் படிக்க, இந்த இணைப்பிற்குச் செல்லவும்:
https://www.pewforum.org/2022/03/02/how-indians-view-gender-roles-in-families-and-society

செயல்முறையியல் (ஆங்கிலத்தில்):
https://www.pewforum.org/2022/03/02/methodology-47

டாப்லைன் கருத்தாய்வு (ஆங்கிலத்தில்): https://www.pewforum.org/wp-content/uploads/sites/7/2022/02/PF_03.02.22_India_Gender_Topline.pdf

இந்த ஆய்வு பற்றிய மேலதிகத் தகவலுக்கு அல்லது ஆராய்ச்சியின் இணையர் ஜொனாதன் இவான்ஸ் மற்றும் ஆராய்ச்சியின் இணை இயக்குநர் டாக்டர்.நேஹா சாஹ்கல் ஆகிய முன்னணி ஆராய்ச்சியாளர்களுடன் நேர்காணல் ஏற்பாட்டிற்கு, தயவுசெய்து அன்னா ஷில்லர்-ஐ aschiller@pewresearch.org அல்லது +1-202-419-4514-இல் தொடர்புகொள்ளவும்.

###

ப்யூ ரிசெர்ச் சென்டர் ஆனது உலகில் மாற்றத்தைக் கொண்டுவரும் பிரச்சினைகள், மனோபாவங்கள் மற்றும் போக்குகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கிற ஒரு நடு நிலையான அறிவுசார் அமைப்பு ஆகும். அது கொள்கை முடிவுகளை எடுப்பது இல்லை. இந்த சென்டர், இதற்கு முதன்மை நிதி வழங்குனரான ப்யூ சாரிட்டபிள் ட்ரஸ்ட்ஸ்-இன் துணை நிறுவனமாகும். எமது தினசரி மற்றும் வாராந்திர மின்னஞ்சல் செய்தி மடல்களின் சந்தாதாரர் ஆகுங்கள்.

*இந்தச் செய்தி வெளியீடு அதன் ஆங்கில மூலப் பதிப்பிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.*